டி.ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகின்றனர்!

பம்மல் தெற்குப் பகுதி கழகத் தோழர்களுக்கு பொங்கல் பரிசு!

வே.கருணாநிதி தலைமையில் - இ. கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.- பங்கேற்பு!

சென்னை ஜன.12- பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் கழகத் தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா இன்று (12.01.2024 ஞாயிற்றுகிழமை) மாலை 6.00 மணிக்கு, பம்மல் போலீஸ் பூத் அருகில் உள்ள எஸ்.எஸ். மஹால் திருமண மண்டபத்தில் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி தலைமையில் நடைபெறுகிறது.

பகுதி கழக அவைத் தலைவர் ப.காளேஸ்வரன், பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என். பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி. ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்தின், இரா.கந்தவேலு, ரா. கோகுல், சு.மனோகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே. வி.சத்திய பிரபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி., காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் கழகத் தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குகின்றனர்.

இதில் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர்-மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர்-தாம்பரம் மாநகர அவைத்தலைவர் கோ.காமராஜ், தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் வட்ட கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், மாவட்ட மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்திடு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில்

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் சமத்துவ பொங்கல் திருவிழா!

மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமை! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர்- தி.மு.தனியரசு - கே.ஆறுமுகம் பங்கேற்பு!

சென்னை, ஜன. 12 - கழகத் தலைவர் முதலமைச்சர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் உலகெங்கிலும் வாழுகிற ஒட்டு மொத்த தமிழ் மக்களும் கொண்டாடும் தமிழர்த் திருநாளான பொங்கல் திருவிழா திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் மகிழ்வோடு கொண்டாடப்படுகிறது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் சமத்துவ பொங்கல் திருவிழா பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் இன்று (12-1-2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் எர்ணாவூர் லிப்ட்டு கேட் ரவுண்டானா அருகில் நடைபெறுகிறது.

விழாவில் எம்மதமும் சம்மதம் என்கிற கோட்பாட்டை பறைசாற்றுகிற வகையில் அனைத்து சமூக மகளிர் மற்றும் உழைக்கும் மகளிரால் சமத்துவப் பொங்கல் வைத்து கொண்டாடப்படுகிறது.

தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்று துப்புரவு பணியாளர்களுக்கும், மூத்த கழத்தினருக்கும் பொங்கல் பரிசு வழங்க உள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் விளையாட்டுப்ப போட்டிகளுக்கான பரிசு வழங்க உள்ளார்கள் . இதில் வட்ட கழக செயலாளர்கள் கே.பி. சொக்கலிங்கம் எம்.சி, மு.சிவகுமார் எம்.சி, டி. சேகர், மு.மாணிக்க வேலன், பி.தமிழரசன் எம்.சி, கே.பவுல், கி.கண்ணன் ஆகியோர் வரவேற்கின்றனர். பகுதி கழக நிர்வாகிகள் ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ். குறளரசன், ஏ. இந்துமதி, எம். வஜ்ரவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம்,, 1 வது மண்டல குழு தலைவரும் கிழக்கு பகுதி கழக செயலாளருமான தி.மு. தனியரசு, 2 வது மண்டல குழு தலைவரும் திருவொற்றியூர் மத்திய பகுதி கழக செயலாளருமான ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ரா.மோகன சுந்தரம் நன்றி கூறுகிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில்

பொங்கல் தொகையாக ஒரு சல்லிபைசா கூட கொடுக்கவில்லை!

சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கம்!

சென்னை, ஜன. 12- "அ.தி.மு.க. ஆட்சியில் 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் பொங்கல் தொகையாக ஒரு சல்லி பைசா கூட கொடுக்கவில்லை" என்று சட்டப் பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் ஆ. கோவிந்த சாமி பேசும் போது குறுக்கிட்டு உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த விளக்கம் வருமாறு:-

பொங்கல் தொகுப்பு பற்றி உறுப்பினர் கோவிந்தசாமி பேசினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009 ஆம் ஆண்டுதான் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நீங்கள் பொங்கல் தொகையாக ஒரு சல்லி பைசாகூட கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் கொடுக்க வேயில்லை. அதைத் தெரிந்து கொண்டு பேசுங்கள். நாங்கள் தான் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்களல்லவா! (குறுக்கீடு) நீங்கள் தேர்தலுக்காக 2021 ஆம் ஆண்டு ரூ.2,500/- கொடுத்தீர்கள்.

எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, கொரோனா காலத்தில், வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு ரூ.5,000/- கொடுங்கள் என்று எத்தனையோமுறை கேட்டுப் பார்த்தார். ஆனால், நீங்கள் வெறும் ரூ.1,000/- தான் கொடுத்தீர்கள். அப்போது, எங்கள் தலைவர், நீங்கள் ரூ.1,000/- கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மீதமுள்ள ரூ.4,000/-ஐ ஆட்சிக்கு வந்தவுடனேயே கொடுப்போம் என்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, ஆட்சிக்கு வந்தவுடனேயே, முதல் கையெழுத்தாகப் போட்டு, 2 கோடியே 9 இலட்சம் பேருக்கு ரூ.10,000 கோடியை கொடுத்தார் எங்களுடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள். தேர்தலுக்காக நாங்கள் கொடுக்கவில்லை; தேர்தல் முடிந்த பிறகு நீங்கள் செய்யாத காரியத்தை செய்தவர் எங்களுடைய முதலமைச்சர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொங்கல் தொகுப்பு வழங்கப்படுவதைப் பொறுத்தவரையில், நீங்கள் 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் ஒரு சல்லிபைசா கூட கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி குறிப்பிட்டார்.

எஸ்.பாட்சா தலைமையில் இரா.துரைராஜ் எம்.சி முன்னிலையில்

சைதை 172வது வட்டத்தில் பொங்கல் விழா கோலப்போட்டி!

3000 மகளிர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஜன. 12 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னெடுப்பில் 172வது வட்ட கழக செயலாளர் நேரு நகர் எஸ்.பாட்சா தலைமையில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 வது வட்டத்தில் உள்ள வீடுகளில் வீடுகள் தோறும் உள்ள அனைத்து மகளிர்கள் பங்கு பெறும் மாபெரும் கோலப்போட்டி இன்று (12.01.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணிமுதல் 7 மணி வரை நடைபெறுகிறது. காலை 7 மணிக்கு மேல் அதற்கான மதிப்பிட்டு குழு வீடாக சென்று கோலங்களை மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்கப்படுகிறது. முதல் மதிப்பெண் பெற்று வெற்றி பெறும் மகளிருக்கு ரூபாய் 10ஆயிரம் மதிப்புள்ள சலவை இயந்திரமும் இரண்டாம் பரிசாக ரூபாய் 7,500 மதிப்புள்ள டில்டிங் வெட் கிரைண்டரும் மூன்றாவது பரிசாக ரூபாய் 5,000 மதிப்புள்ள மகாராஜா மிக்சியும் மற்றும் கலந்து கொண்டு கோலமிட்ட அனைத்து மகளிர் களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கும் விழா இன்று மாலை 5.00 மணிக்கு கிண்டி, மடுவின்கரை மசூதி காலனி, புதுத் தெருவில் நடைபெறுகிறது

விழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு 3000க்கும் மேற்பட்ட மகளிருக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கிறார். நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா. மோகன்குமார் எம்.சி., பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ஆர்.செந்தில், நா.ராதா கிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம்,

மாவட்ட பிரதிநிதிகள் க. உமாபதி, ஜி.யோவான், வே. முருகன், ஜி.செல்வராஜ், வே. ரமேஸஷ் குமார், டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், ஏ. மஜீத், எஸ்.ஜே.சலாம், இரா. சுதாபிரியன், கோட்டூர் ந.பாபு, கே.எம்.எஸ்.கணேசன், மு. மகேஷ்லாரன்ஸ், சைதை ஆ வரதன், இரா.மலர்விழி, க.ஒப்பிலாமணி, வட்ட கழக நிர்வாகிகள் கே.வி.ஜோய், எஸ்.ஆசிக் அலி, உ.திருவேங்கடம், எல். பரமன், எ.ஹேமலதா, மடுவை டி.அன்பு, எம்.பி.சகாதேவன், பொன்.அனுமந்தன், என்.கே. வெங்கடேசன், எஸ்.அசோக்குமார், பு.ஜவகர்தீன் , மு.முருகன், இரா.சம்பத்குமார், ஆர். சரவணன், ஆட்டோ குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். இதில் வட்டத்தில் உள்ள மாவட்ட அளவிலான அணிகளின் நிர்வாகிகள் பகுதி அளவிலான அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் வட்டச் செயலாளர் நேரு நகர் எஸ்.பாட்சா கேட்டுக் கொண்டுள்ளார்.

நே.சிற்றரசு - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஆயிரம் விளக்கு கிழக்கில் பொங்கல் விழா - நலஉதவிகள்!

தயாநிதிமாறன் எம்.பி. வழங்குகிறார் - மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, ஜன. 12 - ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ் புத்தாண்டு பொங்கல் விழாவை முன்னிட்டு பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களுக்கு புத்தாடை வழங்கி சமத்துவ பொங்கல் விழா இன்று (12-01-2025) காலை 9 மணிக்கு ராமா திருமண மண்டபம் கத்திடல் கார்டன் சாலை நுங்கம்பாக்கத்தில் என் (பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை) தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார். மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி. புத்தாடைகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் வெ.கௌதமன், தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் , மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, சங்கீதா, ஜே. எஸ்.அகஸ்டின் பாபு, வட்ட கழக செயலாளர்கள் கோ.யுவராஜ், ஆர்.பாபு, எப்.பீட்டர் ஜான், பா.மகேஷ், எஸ்.சத்தியபெருமாள், எல்.தவமணி, எஸ்.எம்.கே.ராமன், டி.தேவராஜ், எம்.என்.விஷ்ணு, எம். ஆர்.ஜம்புலிங்கம், கோ.ரவி, மூ.வெங்கடேசன், டி.வைலட் மேரி. எம்ஜெயகுமார், பா.பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய், திருமலை பொன்னுரங்கம், லதா பிளாரன்ஸ், எஸ்.செந்தில்குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு மா.பா.அன்புதுரை தெரிவித்துள்ளார்.

மாதவரம் வடக்கு பகுதி, மாத்தூர் 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், கா. புகழேந்தி, கா தமிழவேந்தன், கா. குமார், கா.விஜயகுமார், கா. சேரலாதன் ஆகியோரின் தந்தையாரும், மாத்தூர் கிளைக் கழக முன்னாள் செயலாளர், இயக்கத்தின் மூத்த முன்னோடி க. காசிநாதன் அவர்களின் 12ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மாமன்ற உறுப்பினர் க. காசிநாதன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட பிரதிநிதிகள் பி. நிர்மல் குமார்,வி. கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ். உதயகுமார், பி. ஜெயராஜ், துரைதசரதன்,பி. துரைசாமி, பேன்சி ரமேஷ், வட்ட நிர்வாகிகள் கோ.. சரவணன், என். ரகுவரன்,துளசி, கோவர்த்தனன், இ. கதிரவன், கன்னியப்பராஜ், ராஜகோபால், குகன், காசி, தமிழரசன், சுமன், வாட்ச் மதிவாணன், ராஜேஷ் கண்ணன், முருகன், வினோத், சந்திப், கஸ்தூரி, சரஸ்வதி, பெரியநாயகி, சுகாசினி,சுந்தரி, கலைச்செல்வி, அத்திக்குளம் தேவி, சரஸ்வதி, சரண்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

சமத்துவப் பொங்கல் விழா - 2 ஆயிரம் பேருக்கு நல உதவிகள்!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - நா.எழிலன்- எம்.கே.மோகன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜன.12 சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆயிரம் விளக்கு கிழக்கு, மேற்கு, அண்ணா நகர் தெற்கு பகுதியில் 2000 நபர்களுக்கு பொங்கல் பரிசு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு வழங்குகிறார்! தயாநிதி மாறன் எம்.பி., நா. எழிலன், எம்.கே. மோகன் பங்கேற்கின்றனர்.

தமிழர்களின் பண்டிகையான பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (12.1.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டின் பேரில் ஆயிரம் விளக்கு மேற்கு கிழக்கு அண்ணா நகர் தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் 2000 நபர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் அமைந்துள்ள எம்.எல்.எம்.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் நா. எழிலன்,எம்.கே.மோகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்வில் ந.ராமலிங்கம், மா. பா. அன்பு துரை, வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள் து. விக்டர், ஆர்.என். துரை, வி. எஸ்.கலை, ஏ. சங்கீதா ஜெ. எஸ். அகஸ்டின் பாபு, ஐ. கென்னடி, தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட/ பகுதி/ வட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர்,துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி/ வட்டக் கழக நிர்வாகிகள், இந்நாள்/ முன்னாள் நிர்வாகிகள், என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கலை முன்னிட்டு, எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலை, மாநகராட்சி சமூக நலக் கூடத்தில் நடைபெற்ற பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழாவில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், 600 கழக முன்னோடிகள் மற்றும் செயல் வீரர்களுக்கு வேட்டி, சேலை, சட்டை, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, 5 கிலோ கொண்ட அரிசிப் பை, சர்க்கரை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சாம்பார் மிளகாய்த் தூள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் நாட்காட்டி அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கினார்.

எஸ்.ஜி.மாதவன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் - ரமணி மாதவன் முன்னிலை!

மதுரவாயல் 147வது வட்ட தி.மு.க. சார்பில் சமத்துவ பொங்கல் விழா - நலத்திட்ட உதவிகள்!

காரம்பாக்கம் க.கணபதி வழங்குகிறார்!

சென்னை, ஜன. 12 - சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (12.1.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு, சீமாத்தம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர், மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமை வகிக்கிறார்.

மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், எஸ்.வெங்கடேச பெருமாள், ஜி.பி.ஆனந்தகுமார், எஸ்.முருகன், இ.தமயந்தி, என்.புருஷோத்தமன், டி. ஜெயமுருகன், சி.ஜீவானந்தம், டி.ராஜன், எம்.ஜெயக்குமார், எஸ்.எம்.பாலாஜி, மாவட்டப் பிரதிநிதிகள் கா.பிருந்தாவனம், ஜி.குப்புசாமி, எம்.ஆர்.சதீஷ், மாவட்டத் துணை அமைப்பாளர் பி.கோபிநாத், பகுதி அமைப்பாளர்கள் உதயம், இ. வேணு, எஸ்.ஜி.வெங்கடேசன், வ.வெங்கடேசன், பொன்.பச்சையப்பன், எஸ்.ஜி.எம். மனோஜ் மாதவன், பகுதி துணை அமைப்பாளர்கள் அஷ்டலட்சுமி நகர் எஸ்.தினேஷ், எல்.ஐ.சி.தியாகராஜன், சி. மகேந்திரன், எஸ்.மூவேந்தன், பி.காளிதாஸ், ஆர்.ஜெயக்குமார், எம்.ரவிக்குமார், ஜி. சௌந்தரி சேகர், முனுசாமி, ஜே.ராமு, ஆர்.ஜோசப், அருண், விநாயகம், பி.டி.தர்மராஜ், பாஸ்கர், கே.வினோத், லோக சந்தர், வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பி.மணி, ராஜஸ்ரீ, நந்தகுமார், ஜே.கே. கோபி, வச்சலா, குருநாதன், ஏ.ஜெகன், எஸ்.செல்வராஜ், முருகப்பன், பட்டேல், பாலன், பழக்கடை ஆறுமுகம், திலீப், ராஜா, யோகராஜ், அசோக், வேலு, மேஸ்திரி முருகன், கட்டிங் மணி, மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பரமத்தி சண்முகம்

சனவரி 12 (2019)

இளமைப் பருவத்திலேயே பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவாளராகவும் – சிந்தனையாளராகவும் திகழ்ந்து, கழகம் தொடங்கிய பின்னர் கழகப் பணியாற்றியவர்.

கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநில நெசவாளர் அணித் தலைவராகவும் – தொ.மு.ச. பேரவை துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.,

கரூர் நகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். "சன்முரசு" இதழ் ஆசிரியராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்றதுடன், நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ.எம். ராமசாமி

சனவரி 12 (2012)

கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

சேலம் மாவட்டம் – ஆத்தூர் நகரச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.